**வருகின்ற 2019-ம் ஆண்டு மே மாதம் 31 -ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திரு.A.ஜஹாங்கீர் பாஷா, பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகரமைப்புப்பிரிவு தொடர்பாக உரிமம் பெற வேண்டிய இனங்களில் சில இனங்களுக்கு மட்டுமே இந்நகர்மன்றத் தீர்மான எண். 136, நாள்: 28.03.2012 -ல் கட்டண விகிதங்கள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. சில இனங்களுக்கு கட்டணங்கள் காட்டப்படவில்லை. அரசின் சட்ட விதிகளின்படியும், நகராட்சி நிதி நிலையை அதிகரிக்கவும் கீழ்கண்ட விகிதங்களை உயர்த்துவது அவசியமாகிறது. எனவே 1920 -ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டப்பிரிவுகளில் நகரமைப்பு பிரிவு தொடர்பான உரிமம் வழங்க வேண்டிய இனங்களுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள கட்டணம் நிர்ணயம் செய்து 01.10.2017 முதல் புதிய கட்டண விகிதத்தை உயர்த்தி அமுல்படுத்த பவானி நகராட்சி தனது தீர்மான எண் 600 நாள்: 21.04.2017ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் விடுப்பட்ட இடங்களுக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். 79 நாள்: 30.04.2018-ல் கட்டிட இடிபாடுகள் அகற்ற, கட்டிடப் பொருட்கள் சேமிக்க, மாடிப்படிக்கட்டு , தனியாக அமைக்க விளம்பரம் செய்ய விண்ணப்ப கட்டணம் ஆகியன வசூலிக்க ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கண்ட கட்டிட உரிம கட்டணங்கள் 3 ஆண்டுகள் காலத்திற்கு அனுமதி வழங்க கட்டணம் வசூலிக்க நகர்மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019 -ன் படியும் தமிழ்நாடு அரசிதழ் 43 பகுதி III பிரிவு 1(a) நாள்: 04.02.2019-ன்படி வெளியீடு செய்து உள்ளதன்படி பவானி நகராட்சியில் நகரமைப்பு பிரிவில் வசூலிக்கப்படும் கட்டிட உரிமம் மற்றும் இதர கட்டணங்கள் கீழ்கண்டவாறு 5 ஆண்டுகளுக்கு வசூலிக்க கட்டணங்கள் நிர்ணயம் செய்தும் மற்றும் கட்டிட உரிமக் காலம் 5 ஆண்டுகளுக்கு முடிவுற்று பின்னர் புதுப்பித்தலுக்காக 3 ஆண்டுகளுக்கு கட்டணங்கள் நிர்ணயம் செய்தும் கட்டிட உரிமம் நீட்டிப்பு செய்யவும் பட்டியலின் படி கட்டணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது

| வ. எண். | சட்டப் பிரிவு /விதிகள் | உரிமம் வழங்கப்படும் காரணம் | கட்டண விகிதம் ( ரூபாயில்) | | எவ்வளவு பரப்பு/ எண் | உரிம காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | தற்போது நடை முறையில் கட்டணம் (ரூபாய்) | 01.10.2001-ல் நிர்ணயம் செய்யும் உத்தேச கட்டணம் (ரூபாய்) | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | 175,176 | தெருக்கள் உரிமம் புதிய தெருக்களை அனுமதித்தல் | 1500 | 5000 | மனைப்பிரிவு கள் நிலத்தின் ஒரு எக்டேர்பரப்பு அல்லது அதன் பகுதிக்குள் அமைப்பும் தெரு/ சாலை எவ்வளவு நீள முள்ளதனாலும் | ஒருமுறை மட்டும் | நகர் ஊரமைப்புத் துறையினரால் நிர்ணயிக்கப்பட்டுள் ள இதர கட்டணம் ஏதேனும் அதையும் செலுத்தி நகராட்சி ஆணையர் வழியாக நகர் ஊரமைப்புத் துறையின் மனைப்பிரிவு அனுமதி |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 181 | நகர் மன்றத்திற்கு உரிமை அறுதியுள்ள பொது தெருக்கள் அல்லது கட்டுப்பட்டு நகர்மன்றத்திற்கு உரிமை அளித்துள்ளதாக இருக்கும் பொது வளாகங்களில் செய்யப்படும் வரை கடப்புகள் உரிமம் தெருவின் மீது திறக்கும்படியாக ( வெளியில் திறக்கும்படி ) அல்லது தொங்கும்படி வைக்கப்படும் கதவு, வாசல், வழி தரைதள சன்னல் ஆகியவற்றுக்கு | - | 100 | ஒவ்வொன்று க்கும் | ஒருநிதி ஆண்டிற்கு | தரை தளத்திற்கு தவிர இதர தளங்களுக்கு உரிமம் தேவையில்லை தரை தளத்திலும் கடப்பு ஆட்சேபனை யற்றது எனக் கருதப்பட்டால் மட்டுமே உரிமம் வழங்கப்படும். |
| 3 | 183(1) | 1.தாழ்வாரங்கள், முகப்பு மாடங்கள் , வெய்யில் மறைப்புகள், மழைத்தட்டிகள், வளைவுகள், மற்றும் இது போன்றவை | 15 | 100 | ஒரு சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | ஒரு நிதி ஆண்டிற்கு | ----- |
| | | 2. திண்ணைகள், சாய்மானங்கள், கற்பலகைகள், மற்றும்இது போன்ற கட்டுமானங்கள் | 15 | 100 | | | ---- |
| 4 | 183(2) | ஓலைக்கீற்றுகள் தார்பாய்கள், மூங்கில் தட்டிகள், தகரங்கள் முதலியவற்றைக் கொண்டுதற்காலிக மாக நிறுவப்படும் பந்தல்கள் மற்றும் இது போன்ற கட்டுமானங்கள் (அ) கோடைக்கால பந்தல்கள் | - | 100 | 10 சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | மார்ச் 1 ஆம் நாள் முதல் 31 ஆம் நாள் வரை உள்ள காலத்தில் | சேர்ந்தார்போல் 90 நாட்களுக்கு மட்டும் |
| | | (ஆ) பொது வழிபாட்டு இடங்களில் மதச்சம்பந்தமான திருவிழாக்கள், தனிப்பட்ட இடங்களில் இறுதிச் சடங்குகள் செய்யப்போடப் பட்டும் பந்தல்கள் | இலவசம் | இலவசம் | | 1 மாதத்திற்கு | பந்தல்கள் போக்கு வரத்துக்கு இடையூறு இல்லாமல் இருக்க வேண்டும். |
| 5 | 183(2) | பெட்டிக்கடைகள் வைப்பதற்கு நகராட்சி எல்லைக்குட்பட்ட எந்தவொரு தெருவிலும் | 1500 | 2000 | 10 சதுர மீட்டர் வரை | ஒரு நிதி ஆண்டிற்கு | - |
| 6 | 186(1) | யாதொரு பொதுத் தெருவிலும், பந்தல் போட குழி தோண்டுவதற்கு | - | 100 | 10ச.மீ பரப்பளவிற்கு | - | தார் மற்றும் மண் சாலை சிமெண்ட் கான்கிரீட் அமைந்த தெரு, சந்து அல்லது சாலை எதிலும் குழி தோண்ட அனுமதி இல்லை. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | 188 | எந்தவொரு கட்டித்தை கட்டுவதால் அல்லது இடிப்பதால அல்லது அதன் வெளிப்பகுதியை மாறுதல் செய்வதால் அல்லது பழுது பார்ப்பதால் மற்றும் கட்டுமான பொருள்களை சேமிப்பதால் சிதைவுகளை கொட்டி வைப்பதால், தெரு அல்லது நடைபாதையில் ஏற்படும் தடங்கள் அல்லது இடைஞ்சல்களுக்கு | 250 | | | விண்ணப்பிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் கட்டிடத்தின் பரப்பளவின் ஒவ்வொரு சதுர மீட்டருக்கும் இக்கட்டணம் வசூலிக்கப்படும | 500.<br>3 ஆண்டு களுக்கு |
| | | 1.கட்டிடப் பொருள் சேமிக்க | - | 500 | 10ச.மீ | 5 ஆண்டிற்கு | |
| | | 2. கட்டிட இடிபாடுகள் அகற்ற | - | 500 | 10ச.மீ | | |
| 8 | 197(1)<br>201 | கட்டிட உரிமம் குறிப்பு: குடிசை தவிர்த்த யாதொரு கட்டிடத்தை கட்டுவதற்கு அல்லது மீளக்கட்டுவதற்கு கட்டிடத்தில் செய்யப்படும் மாறுதல்கள் மற்றும் ( கூடுதல் உட்பட) உறுதிப்படுத்தப்பட்ட காரைத்தளம் ( ஆர்.சி.சி.) அல்லது மதராஸ் தளம் கொண்ட கட்டிடம் ( அல்லது) பகுதி காரைத்தளம் மற்ற பகுதி ஓடு, தகரம், சிமெண்ட் அல்லது வேறு வகைக்காரைக் கட்டிடம் | | | | | |
| | | அ) தரைதளம் | 200 | 300 | 10 சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 5 ஆண்டிற்கு | 300<br>3 ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | அ) முதல் தளம் | 250 | 670 | 10 சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 5 ஆண்டிற்கு | 400<br>3 ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | 2. ஓடு அல்லது கல்நர் சிமெண்ட் அட்டை அல்லது தகரம் வேய்ந்த கூரை கட்டிடம் ( ஓலை கூரை அல்லாதது) | 100 | 335 | 10 சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 5 ஆண்டிற்கு | 200<br>3 ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 3. ஓலை அல்லது புல் கூரைக்கு | - | 85 | 10 சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 5 ஆண்டிற்கு | 50<br>3 ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | 4. சுற்று சுவர் அல்லது எல்லை சுவர் கட்டுதல் ( 2.40 மீ) உயரத்திற்கு குறைவாக சுற்றுச்சுவர் கட்ட) | 175 | 670 | ஒன்றுக்கு | 5 ஆண்டிற்கு | 400<br>3 ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | 5. நச்சுத் தடைத் தொட்டி, கழிவு நீர், தொட்டி, முதலியவை கட்டுதல் ( Septic tank or soak pit) | - | 1670 | ஒன்றுக்கு | 5 ஆண்டிற்கு | 1000<br>3 ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | 6.தனியாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுதல் | 100 | 335 | ஒன்றுக்கு | 5ஆண்டிற்கு | 200<br>3 ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | 7. தனிப்பட்ட இடத்தில் கட்டப்படும் திறந்த வெளி குளியலறை கழிப்பிடம் அல்லது சிறுநீர் கழிப்பிடம், தொட்டிகள், முதலியவை கட்டுதல் | 100 | 335 | ஒன்றுக்கு | 5ஆண்டிற்கு | 200<br>3 ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | 8. கட்டிடத்திற்குள் கட்டப்படும் கழிப்பிடம் (குளியல் அறை, மல அறை) | 75 | 250 | ஒன்றுக்கு | 5 ஆண்டிற்கு | 150<br>3 ஆண்டு களுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | 9.கட்டிடத்திற்குள் கட்டப்படும் மல அறை மட்டும் | 75 | 250 | | 5ஆண்டிற்கு | 150<br>3 ஆண்டு களுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | 10. கட்டிடத்திற்குள் கட்டப்படும் குளியல் அறை மட்டும் | | 250 | ஒன்றுக்கு | 5ஆண்டிற்கு | 150<br>3 ஆண்டு களுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | 197(1) 201 | குடியிருப்பு அல்லாத கட்டிடம் ( தொழிற்சாலை, ஹோட்டல், கடைகள், குடோன் குடிசை தவிர்த்த யாதொரு கட்டிடத்தை ( தார்சு, ஓடு, கல்நார், சிமெண்ட்அட்டை அல்லது தகரம் வேய்ந்த கூரைக்கட்டிடம் உட்பட) கட்டுவதற்கு அல்லது மீளக்கட்டுவதற்கு ( கட்டிடத்தில் செய்யப்படும் மாறுதல்கள் மற்றும் கூடுதல் கட்டிடம் உட்பட)<br>1.தரை தளம் | 350 | 835 | 10 சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 5 ஆண்டிற்கு | 500<br>3 ஆண்டு களுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| 10 | | 2. முதல் தளம் | 400 | 1000 | 10 சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | 5 ஆண்டிற்கு | 600<br>3 ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| 10 | 197(1) 198, 200 | (i) கட்டிட அனுமதி மனையிட அங்கீகரா கட்டடிம் | 200 | 500 | (மனையிட பரப்பளவில் 100 சதுர மீட்டர் வரை) 10.ச.மீ வரை | 5 ஆண்டிற்கு | 300<br>ஒரு முறை மட்டும் 3ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | (ii) கட்டிட அனுமதி மனையிட அங்கீகரா கட்டடிம் | - | 670 | 100 சதுர மீட்டருக்கு மேல் 200 சதுர மீட்டர் வரை ) 10.ச.மீ | 5 ஆண்டிற்கு | 400<br>ஒரு முறை மட்டும் 3ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | (iii) கட்டிட அனுமதி மனையிட அங்கீகரா கட்டடிம் | - | 835 | 200சதுர மீட்டருக்கு மேல் 300 சதுர மீட்டர் வரை | 5 ஆண்டிற்கு | 500<br>ஒரு முறை மட்டும் 3ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | (iv) கட்டிட அனுமதி மனையிட அங்கீகரா கட்டடிம் | - | 1000 | 300 சதுர மீட்டருக்கு மேல் 500 சதுர மீட்டர் வரை | 5 ஆண்டிற்கு | 600 ஒரு முறை மட்டும் 3ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | (v) கட்டிட அனுமதி மனையிட அங்கீகரா கட்டடிம் | - | 1670 | 500 சதுர மீட்டருக்கு மேல் 1000 சதுர மீட்டர் வரை ஒன்றுக்கு | 5 ஆண்டிற்கு | 1000<br>ஒரு முறை மட்டும் 3ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | 207 | கிணறுகள், உரிமம், கிணறு வெட்ட இறக்க அல்லது தோண்ட குழாய் கிணறு துளைக்க | - | 1670 | ஒன்றுக்கு 5 ஆண்டிற்கு | 5 ஆண்டிற்கு | 1000 ஒரு முறை மட்டும் 3ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | | - | 1670 | 500 சதுர மீட்டருக்கு மேல் 1000 சதுர மீட்டர் வரை ஒன்றுக்கு | 5 ஆண்டிற்கு | 1000 ஒரு முறை மட்டும் 3ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| 12 | 208(1) | குடிசைகள் உரிமம் ஒரு குடிசை கட்டுவதற்கு அல்லது மீளக்கட்டுவதற்கு | - | 170 | 10ச.மீ அல்லது அதன் பாகத்திற்கு | 5 ஆண்டிற்கு | 100 3ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| 13 | 217 | தற்காலிக கட்டுமானங்கள் கட்டுமானப் பொருட்கள் பணியுடன் தொடர்புடைய எல்லாவிதமான தற்காலிக கட்டுமானங்களுக்கு நிறுவ (100 சதுர அடிக்கு) | - | 1670 | இனம் ஒன்றுக்கு | 5 ஆண்டிற்கு | 1000 3 ஆண்டிற்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| 14 | 197-200<br>201<br>208<br>215<br>217 | தண்டக்கட்டணம் மேற்குறிப்பிட்ட கட்டுமானப் பணிகள் எவையும் நகராட்சி நிர்வாக அதிகாரியின் முன் அனுமதி பெறாமல் துவங்கப் பட்டிருந்தால் ( மொத்த உரிமக் கட்டணத்தில் 50% ( ஐம்பது சதவீதம் ) சேர்த்து வசூலிக்கப்படும் | - | 50% ( மொத்த உரிமை கட்டணத்தில் ஐம்பது சதவீதம் செலுத்தப்பட வேண்டும். | உத்தேச கட்டிட பரப்பளவிற்கு | 5 ஆண்டிற்கு | - |
| 15 | 306(8) | கட்டிடம் கட்டுபவர் மற்றும் அளவர் உரிமம் ( Licensed Building Surveyor ) 1. உரிமக் கட்டணம் | 1000 | 5000 | ஒன்றுக்கு | 5 ஆண்டிற்கு G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | இக்கட்டண விகிதங்கள் ஏற்கனவே வழங்கப் பட்டுள்ள உரிமங் களுக்கும் பொருந்தும் உரிமத்தை புதுப்பிக்க இதே கட்டண விகிதம் அமுலாக்கப் படும் |
| | | 2. பிணைய வைப்பத் தொகை | 2000 | 5000 | ஒன்றுக்கு | ஒரு தடவை மட்டும் | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 16 | | 1. கட்டிட உரிமை பதிவேடுகளிலிருந்து - மனை உரிம கட்டிடம் மற்றும் மனை உரிமம் அனுமதிக்கப்பட்ட வரைபடம் உண்மை நகல் வழங்குவதற்கு | 150 | 835 | ஒரு உரிமம் சம்மந்தப்பட்ட ஒரு இணை வரை படங்களுக்கு | 5 ஆண்டிற்கு | 500 ஒரு முறை மட்டும் 3ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| | | 2. சர்வே பதிவேடுகளிலிருந்து நிலத்தின் வரைபடம் மற்றும் நகல் பதிவேடு ( FMP, TSLR) | 110 | 300 | ஒன்றுக்கு | ஒருமுறை ஒரு புல எண்ணுக்கு பதிவேடு நகலுடன் | |
| 17 | | 1. நகர வரைபடம் வழங்குவதற்கு 1. நகர வரைபடம் ( town map சிறிய அளவு | 500 | 500 | ஒன்றுக்கு | ஒருமுறை | |
| | | 2. நகர வரைபடம் ( Town Map) பெரிய அளவு | 500 | 500 | ஒன்றுக்கு | ஒருமுறை | |
| 18 | 285-B ,285 -C 285-CC 285 -D,285 - E 285 -F 285- H ,285-J | 1. விளம்பர பலகை ( புதிய பேருந்து நிலைய பகுதியில் ) அ.பலகை மற்றும் தட்டி ஸ்டீல் 2. விளம்பர பலகை நகராட்சி எல்லை வரை உள்ள பவானி மெயின் ரோடு அந்தியூர் சாலை பழைய பஸ்நிலையம் பகுதிகளுக்கும். காவேரி வீதி மற்றும் குமாரபாளையம் சாலை மார்க்கெட் பகுதிகளுக்கும் . 3. விளம்பர பலகை நகராட்சி மற்ற பகுதி சினிமா தட்டி 4. விளம்பர பலகை 1மாத குறுகிய காலத்திற்கு, 5. விளம்பர பலகை மின் கம்பம் அல்லது தட்டி போன்றவைகளில் வைக்க. 6. கை காட்டி பலகை | - | 250 | விளம்பர தட்டி , விளம்பர பலகை , பிளக்ஸ் பேனர், வைக்க விண்ணப்ப கட்டணம் | ஒரு எண்ணிக்கை க்கு ஒரு முறை | மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டும் கட்டணத்தை செலுத்தி நகராட்சி ஆணையாளர் வழியாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் விளம்பரப்பலகை நிறுவ அனுமதி பெற வேண்டும். |
| 19 | | குடியிருப்பு உபயோகம் கட்டிட அபிவிருத்திக் கட்டணம் | - | 7.00 | ஒரு சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | ஒரு முறை | அபிவிருத்திக்காக விண்ணப்பம் பெறப்படும் போது |
| | | நில அபிவிருத்திக் கட்டணம் | 2 | 5.00 | ஒரு சதுர மீட்டர் அலலது அதன் பாகத்திற்கு | ஒரு முறை | அபிவிருத்திக்காக விண்ணப்பம் பெறப்படும் போது |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | குடியிருப்பு அல்லாத உபயோகம் கட்டிட அபிவிருத்திக் கட்டணம் | - | 10.00 | ஒரு சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | ஒரு முறை | அபிவிருத் திக்காக விண்ணப்பம் பெறப்படும் போது |
| | | நில அபிவிருத்திக் கட்டணம் | - | 7.00 | ஒரு சதுர மீட்டர் அல்லது அதன் பாகத்திற்கு | ஒரு முறை | அபிவிருத் திக்காக விண்ணப்பம் பெறப்படும் போது |
| 20 | | மனைப்பிரிவு வரைபடம் நகல் | - | 1000 | ஒன்று | ஒருமுறை | - |
| 21 | | மழைநீர் சேகரிப்பு தொட்டி, முன்வைப்புத் தொகை | 2750 | 4000 | ஒன்று | ஒருமுறை | கட்டிடத்தை கட்டி முடித்தவுடன் திரும்ப வழங்கப்படும் |
| 22 | | கூர்ந்தாய்வுக் கட்டணம் | 100 | 835 | ஒரு வரைபட அனுமதி | 5 ஆண்டுகளுக்கு | 500 3ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| 23 | | மாடிப்படிக்கட்டுகள் ( தனியே கட்டிடத்தில் இருந்து வெளிப்புறமாக உள்ளபோது) | - | 470 | 1 எண்ணிக்கை | 5 ஆண்டுகளுக்கு | ரூ.250.00 3ஆண்டுகளுக்கு கட்டிட உரிமம் புதுப்பித்தலுக்கு மட்டும் |
| 24 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | கூர்ந்தாய்வுக் கட்டணம் | - | 2.00 | 1. ச.மீ | 5ஆண்டுகளுக்கு | - |
| 25 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | 1st Revised Plan | - | 1.00 | 1. ச.மீ | 5ஆண்டுகளுக்கு | - |
| 26 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | 2nd Revised Plan | - | 40.பைசா | 1. ச.மீ | 5ஆண்டுகளுக்கு | - |
| 27 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | 3rd Revised Plan | - | 20.பைசா | 1. ச.மீ | 5ஆண்டுகளுக்கு | - |
| 28 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | மனைப்பிரிவு / மனைஉட்பிரிவு / மனை ஒருங்கிணைப்பு | - | 75.பைசா | 1. ச.மீ | ஒரு முறை மட்டும் | - |
| 29 | G.O.no. M.s.18 நாள்: 04.02.2019 | உபயோக மாற்றம் (Reclassification ) | - | 20000.00 | மொத்த பரப்பளவிற்கு | ஒரு முறை மட்டும் | |
| | மேற்கண்ட பட்டியலில் நிர்ணயிக்கப்பட்ட கட்டிட உரிமக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை புதியதாக விண்ணப்பிக்கும் கட்டிட விண்ணப்பங்களுக்கு ஐந்தாண்டுகளுக்கும் மற்றும் கட்டிடம் உரிமம் புதுப்பிக்க அனுமதி கோரும் விண்ணப்பங்களுக்கு மேற்கண்ட பட்டியலில் ஏற்கனவே மன்றத்தின் அனுமதி பெற்றுள்ளபடி மூன்றாண்டுகளுக்கும் வசூலிக்கவும் மேற்கண்ட கட்டண விபரங்களை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் மன்றத்தின் முன் அனுமதி வேண்டி மன்றப்பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது. | | | | | | |

**அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்** **( ந.க.எண். 626/2017/எப்1)**

2.இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 30.06.2019-ல் முடிவடைகிறது. 01.07.2019 லிருந்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், குத்தகைக்கு செலுத்த வேண்டிய டேவணித் தொகை ரூ.1,50,000/-மும் மற்றும் 01.04.2018க்கு பிறகு பெறப்பட்ட சொத்து மதிப்புச் சான்று ரூ.5,00,000/- அல்லது ( செல்வ நிலை சான்றிதழ் இல்லையெனில் ) கூடுதல் ஏல டெபாசிட் தொகை ரூ.1,00,000/- பொது ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1707/2017/அ2)

3. இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN136- AY6793 -ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடன் சரி செய்து வாகனத்தை பயன்படுத்த வேண்டியிருந்ததால் ஈப்பு வாகனத்தின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான "CAI Industries Pvt. Ltd Erode அவர்களிடம் பழுது நீக்கம் செய்து செலவு பட்டியல் வழங்குமாறு வாகனம் பழுது நீக்கம் செய்ய அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி வாகனம் பழுது நீக்கம் செய்யப்பட்டு பழுது நீக்க செலவு CAI Industries Pvt Ltd Erode அவர்களின் பட்டியல் நாள்: 06.05.2019-ன் படி ரூ.65,987/- ஆகும்.

எனவே மேற்படி பழுது நீக்க செலவின தொகை ரூ.65,987/-ஐ CAI Industries Pvt Ltd Erode அவர்களுக்கு வழங்க செலவினத் தொகையை அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். ( ந.க.எண்.393/2019/இ1)

4. பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு குறித்து 10.03.2019 அன்று மாலை தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நடைபெற்றது மேற்கண்ட கூட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்தும், கட்சி சுவர் விளம்பரங்கள், கட்சி பிளக்ஸ், பேனர்கள், கட்சி கொடிக்கம்பங்கள் ஆகியன அகற்ற அறிவுறுத்தப்பட்டது.

மேற்கண்ட காணொலி காட்சியில் Election Commission மூலம் தெரிவிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடவடிக்கையின்படி நகராட்சி பகுதியில் கட்சி சுவர்விளம்பரங்கள், கட்சி கொடிக்கம்பங்கள் , கட்சி பிளக்ஸ் பேனர்கள் ஆகியன அகற்றப்பட வேண்டியுள்ளது. நகராட்சி வார்டுகளில் மேட்டூர் மெயின் சாலைக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள இடங்களில் உள்ள சுவர் விளம்பரங்கள் புதிய பஸ் நிலையம் ஆகிய இடங்களில் அகற்றி அதில் சுவற்றில் வெள்ளை நிற சுண்ணாம்பு அடிக்கவும் ஆகும் செலவினம் ரூ.5000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.1078/2015/எப்1)

5. பவானி நகராட்சி - பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு குறித்து 10.03.2019 அன்று மாலை தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. மேலும் காணொலி காட்சியின் மூலம் தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்து, நடவடிக்கை குறித்தும் கட்சி கொடிக்கம்பங்கள், கட்சி விளம்பரங்கள், கட்சி பேனர்கள் ஆகியன அகற்ற அறிவுறுத்தப்பட்டது.

மேற்கண்ட மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்திரவின் படியும், தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படியும் நகராட்சிப்பகுதியில் உள்ள அரசியல் கட்சியின் சுவர் விளம்பரங்கள் அகற்றப்படவேண்டியுள்ளது. நகராட்சி வார்டுகளில் மேட்டூர் மெயின்சாலையில் மேற்குபகுதியில் உள்ள இடங்களில் உள்ள சுவர் விளம்பரங்களை அகற்றவும், விளம்பரத்தின்மீது வெள்ளை நிற சுண்ணாம்பு அடிக்கவும் ஆகும் செலவினம் ரூ.5000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றபொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 1078/2015/எப்1)

6. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 29280/2016/WP நாள்: 26.3.2019-ல் 01.07.2018 முதல் 31.03.2019 வரை பவானி நகராட்சியின் மின் ஆளுமை இணைய தள மென் பொருள் சேவைக்கு தொகை ரூ.1,44,886/-ஐ BSNL நிறுவனத்திற்கு 31.03.2019க்குள் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை ரூ. 1,44,886/- வருவாய் நிதியில் இருந்து BSNL நிறுவனத்திற்கு செலுத்தியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 391/2015/டி2)

7. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் துப்புரவுப்பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் கிருமிநாசினிகளின் இருப்பு குறைவாக இருந்ததால் தேவையான கிருமிநாசினிகள் பின்வரும் விபரப்படி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| நீர்த்த சுண்ணாம்பு துாள் | - 5000 kG |
| பிளிச்சிங் பவுடர் | - 500 kg |
| கருப்பு பினாயில் | - 150 Litre |
| கிளினீங் ஆசிட் | - 50 Litre |

மேற்படி கிருமிநாசினிகள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன்படி m/s Tamil Nadu Multipurpose Indio Serve, 107, First floor, N.S. Complex No. 25A, Sundaradesa Tank Street, Trichy 620008 என்னும் தமிழக அரசின் தொழில் வணிகத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு நிறுவனத்தில் கொள்முதல் செய்து பணி மேற்கொள்ளப்பட்டமைக்கு ரூ.89157/- செலவிடப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். 309/2017/ எச்1)

8. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் காம்பெக்டர் வாகனம் TN36AR3744 வாகனத்தின் தகுதிச்சான்று 27.04.2019 ஆம் தேதியுடன் முடிவடைந்ததால் வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க வாகனத்தில் ஏற்பட்டிருந்த பழுதுகளை பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் m/s VAMBSK FABS 235A. KK புதுார் ரோடு , கோவில் மேடு, கிழக்கு வண்டிபாளையம் (Po) கோவை அவர்களின் நிறுவனத்தில் பழுதுகள் செப்பனிடப்பட்டு அதற்கான பட்டில் தொகை ரூ.98500/- அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வாகனம் தகுதிச்சான்று புதுப்பிக்கப்பட்டது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். 21/2019/ எச்1 )

9. பவானி நகராட்சியில் தற்போது பணியாற்றி வரும் அலுவலர்கள், அலுவலக பணியாளர்கள் , மாறுதலாகி சென்ற பணியாளர்கள், ஓய்வு பெற்ற பணியாளர்கள் ஆகியோர்களின் சேமநலநிதி தொகைக்கு அரசு வழங்கியுள்ள வட்டித் தொகையினை கணக்கிட்டு சம்மந்தப்பட்ட சந்தாதாரர்களுடைய கணக்கில் வரவு வைக்க ஏதுவாக 01.04.2000 முதல் 31.03.2018வரையிலான நிதியாண்டுகளுக்கு பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி தொகைக்கு வட்டியை கணக்கிட்டு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை ஈரோடு அவர்கள் மூலமாக இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்க வேண்டியுள்ளது.

இப்பணியினை வட்டியை கணக்கிடும் நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களிடம் ஒப்படைத்து வட்டியினை கணக்கிடவும், விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.30,000/- க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். /2019/எச்1)

10. பவானி நகராட்சியில் அரசாணை எண். 101 (ந.நி.கு.வ.துறை) நாள் 30.04.1997ன் படி தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும், ஆனால் இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களின் பணியிடங்களின் எண்ணிக்கை 86 ஆகும். தற்போது மேற்படி மொத்த பணியிடங்களில் 32 பணியிடங்கள் காலியாக உள்ளது.

குறியீட்டின்படி தேவைப்படும் 177 துப்புரவு பணியாளர்களில் தற்பொழுது 54 நிரந்தர துப்புரவு பணியாளர்களும், ஒப்பந்ததாரர் மூலம் Outsourcing முறையில் 60 பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இந்நிலையில் 63 துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் 63 பணியாளர்களை Outsourcing முறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பெற்று பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது ஒப்பந்ததாரர் மூலம் Outsourcing முறையில் 60 பணியாளர்களை கொண்டு பணிபுரிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் வழங்கிய நிர்வாக அனுமதியின் காலம் வரும் 31.07.2019ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் இந்நகராட்சியின் 54 நிரந்தர துப்புரவு பணியாளர்ளை கொண்டு அத்தியாவசிய துப்புரவு பணிகளான வீடு, வீடாக குப்பைகள் பிரித்து சேகரம் செய்தல், தெரு கூட்டுதல், சாக்கடை சுத்தம் செய்தல், பொதுக்கழிப்பிடம் சுத்தம் மற்றும் இதர பொது சுகாதார பணிகள் நகர் முழுவதும் முழுமையான அளவில் மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், தற்போது ஒப்பந்த அடிப்படையில் Outsourcing முறையில் 60 பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது திருப்திகரமாக உள்ளதால் 01.08.2019 முதல் மூன்றாண்டு காலத்திற்கு 60 துப்புரவு பணியாளர்களை Outsourcing முறையில் மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்கள் நிர்ணயித்த ஊதிய விகிதத்தில் (Collectrate Rate) ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரரிடம் பணியாளர்களை பெற்று துப்புரவு பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.121.17 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1320/2016/எச்1)

11. இந்நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2012-13 ன் கீழ் ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் அந்தியூர் - மேட்டூர் பிரிவில் உயர் மின் கோபுர விளக்கு அமைத்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு , அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய " Hi- Tech" Engineering திண்டுக்கல் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு , பணி நிறைவடைந்து விட்டது.

மேற்கண்ட பணிக்காக **" Hi- Tech" Engineering** நிறுவனம் செலுத்திய முன் வைப்புத் தொகை 1% ரூ.5,500/-ம் செலவின பட்டியலில் பிடித்தம் செய்த FSD, 1% ரூ.5,500/-ம் ஆக மொத்தம் ரூ.11,000/- ஐ திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகைகள் 2012-13 ம் ஆண்டு காலங்கடந்த வைப்பு நிதியாக உள்ளது. எனவே இத்தொகையினை திரும்ப **"Hi- Tech" Engineering** திண்டுக்கல் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 033/2019/ இ1 )

12. இந்நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2012-13 ன் கீழ் ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் ஸ்ரீசங்கமேஸ்வரர் திருக்கோயில் அருகே உயர் மின் கோபுர விளக்கு அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு , அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய " Hi- Tech" Engineering திண்டுக்கல் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு , பணி முடிவுற்றது.

மேற்கண்ட பணிக்காக **" Hi- Tech" Engineering** நிறுவனம் செலுத்திய முன் வைப்புத் தொகை 1% ரூ.5,500/- ம் செலவின பட்டியலில் பிடித்தம் செய்த FSD, 1% ரூ.5,500/-ம் ஆக மொத்தம் ரூ.11,000/- ஐ திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகைகள் 2012-13 ம் ஆண்டு காலங்கடந்த வைப்பு தொகையாக உள்ளது. எனவே மேற்கண்ட தொகை ரூ.11,000/-ஐ **"Hi- Tech" Engineering** திண்டுக்கல் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது (ந.க.எண். 033/2019/ இ1 )

13. இந்நகராட்சியின் தினசரி தட்டச்சு E-mail பணிக்காக Out Sourcing முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஈரோடு அவர்களின் விலை விகிதத்திற்கு பணிமேற்கொள்ள ( 01.06.2018 முதல் 31.03.2019 வரை ) ஓராண்டு காலத்திற்கு நகர்மன்ற தீர்மானம் எண். 122, நாள்: 28.05.2018-ல் அனுமதி வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஒப்பந்தகாலம் 31.03.2019 உடன் முடிவடைந்தது பணியின் அத்தியாவசியம் கருதி புதியதாக விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள தேர்தல் நடைமுறை விதிகள் அமுலில் இருந்ததால் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏற்கனவே பணி மேற்கொண்ட நிறுவனமான M/S. Gold Soft Computer ற்கே 05.04.2019 முதல் 30.06.2019 வரை தொடர் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டது.

எனவே மேற்கண்ட பணிக்காக முன் அனுமதி வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் வழங்கலாம் (865/2018/இ1)

14. இந்நகராட்சியில் CWBS புள்ளிவிபர தொகுப்பாளர் பணியினை மேற்கொள்ள "Out Sourcing" முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஈரோடு அவர்களின் விலைவிகிதத்திற்கு பணி மேற்கொள்ள (01.06.2018 முதல் 31.03.2019 வரை) ஓராண்டுகாலத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.127, நாள்: 28.05.2018 -ல் அனுமதி வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஒப்பந்தகாலம் 31.03.2019 உடன் முடிவடைந்தது. பணியின் அத்தியாவசியம் கருதி புதியதாக விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள தேர்தல் நடைமுறை விதிகள் அமுலில் இருந்ததால் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏற்கனவே பணி மேற்கொண்ட நிறுவனமான M/S. Gold Soft Computer- ற்கு 05.04.2019 முதல் 30.06.2019 வரை தொடர் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டது.

எனவே மேற்கண்ட பணிக்காக முன் அனுமதி வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் வழங்கலாம் (865/2018/இ1)

15. பவானி நகராட்சியில் DAY -NULM 2017-18 திட்டத்தில் கீழ் 49.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மருத்துவமனை வளாகத்தில் உட்புற நோயாளிகளின் உறவினர்கள் தங்கும் அறை ( Special Shelter) கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 38038/2013/UPA-2 நாள்: 31.10.2018-ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மண்டல செயற்பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரகம் திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2217/2014/பி1 நாள்: 06.03.2018-ல் தொழில் நுட்ப அனுமதி பெற்று 20.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி 23.4.18-ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டது. வரைபடத்திற்கு Structural Design அரசு பொறியியல் கல்லூரி சேலம், அவர்களின் கடித ந.க.எண். சி -195/GCE/SLM/ CIVIL/SOIL/ LAB நாள்: 04.05.2018 அன்று பெறப்பட்டது. இந்நிலையில் அரசு மருத்துவமனை அதிகாரிகள் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் கட்டப்படும் கட்டிடத்தின் ஆக்கிரமிப்பு பரப்பளவை குறைக்கும் நோக்கில் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய அறைகள் கட்டுமாறு அறிவுறுத்தினார்கள் அதன் அடிப்படையில் வரைபடம் ( PLAN) தயாரிக்கப்பட்டு துணை இயக்குநர், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், அலுவலகம், சேலம் அவர்களின் கடிதம் எண். 6054/2018-SR -3 நாள்: 18.03.2019 அன்று DTCP அனுமதி பெறப்பட்டது. அனுமதி பெறப்பட்ட Plan க்கு Structural Design ( வடிவமைப்பு) IRTT கல்லூரி, ஈரோடு அவர்களிடம் பெறப்பட்டு Working Estimate தயாரிக்கப்பட்டுள்ளது. Working Estimate மண்டல செயற்பொறியாளர் திருப்பூர் அவர்களிடம் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1333/2014/இ1)

16. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். 2288/பி3/2019 நாள். 25.02.2019 இல் ஒவ்வொரு நகராட்சியும் நகராட்சிக்கென திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திட்ட செயலாக்க அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திட்ட செயலாக்க கருத்துரு இந்கராட்சியால் தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களக்கு ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் கடிதம் எண். 2288/2019/பி3 நாள். 26.03.2019 இல் இந்நகராட்சிக்கான திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் செயலாக்கத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியும் மற்றும் மாவாட்ட அரசிதழில் இதனை வெளியிடவும் அனுமதி அளித்தும் உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் இந்நகராட்சியால் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை செயலாக்க பணிக்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து அங்கீகாரம் பெறுவதற்கு இந்நகராட்சியால் தயாரிக்கப்பட்ட திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திட்டச் செயலாக்க அறிக்கை சமர்பிக்கப்பட்டு அதனடிப்படையில் இந்நகராட்சிக்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய இணை முதன்மை பொறியாளர் அவர்களின் செயல்முறை எண். JCEE/SLM/TNPCB /SWM/F.08/PND/2019 நாள். 12.04.2019 இல் இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை செயலாக்கத்திற்கு அங்கீகாரம் எண். 9 நாள். 12.04.2019 இல் அங்கீகாரம் (Authorization) வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பவானி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திட்டச் செயலாக்க ஷரத்துக்களை இந்நகராட்சியில் செயல்படுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் ஒப்புதல் வழங்கலாம் (ந.க.எண்.128/2015/எச்1)

17.இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் மினி ஆட்டோ TN36AR 3430 வாகனத்தின் தகுதிசான்று 11.04.2019 ஆம் தேதியுடன் முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு தகுதிசான்று R.T.O பவானி அவர்களிடம் புதுப்பித்து சான்று பெறுவதற்கு வாகனத்தில் ஏற்பட்டிருந்த பழுதுகள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் M/S பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், 63 வைரபாளையம் நால்ரோடு , வாட்டர் ஆபிஸ் ரோடு கருங்கல்பாளையம் (PO) ஈரோடு அவர்களிடம் பழுது சரிசெய்யவும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பழுது பணிகள் மேற்கொள்ள உரிய பட்டியல் தொகை ரூ.39,950/-ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும் தகுதி சான்று புதுப்பித்தல் கட்டணம் ரூ. 650/- மற்றும் புகைப்பரிசோதனை கட்டணம் ரூ.200/-ம் செலுத்தவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் பதிவு செய்யலாம்
2. தகுதிசான்று புதுப்பித்தல் கட்டணம், புகைப்பரிசோதனை கட்டணம் செலுத்திட மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.21/2019/எச்1)

18. பவானி நகராட்சியில் உள்ள 27 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 35 பணியாளர்களை (DBC Workers) நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி M/s Trustus Outsourcing Solutions Pvt, Ltd, Chennai அவர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டு நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்: 217/2017/எச்1, நாள்: 30.10.2018இன் படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.383/- (ESI and EPF உட்பட) என்னும் ஊதிய விகிதத்தின் அடிப்படையில் பணியாளர்களை வழங்க உத்திரவிடப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. DBC பணியாளர்களை 01.04.2018-முதல் தொடர்ந்து பயன்படுத்தி இந்நகராட்சியில் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதன் பலனாக பவானி நகராட்சியில் 2018ஆம் ஆண்டிலிருந்து நாளது தேதி வரை எந்தவொரு நபரும் டெங்கு நோயினால் பாதிக்கப்படவில்லை என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 25.06.2019ம் தேதியுடன் முடிவடையும் நிலையில் பார்வை 1ல் காணும் M/s Trustus Outsourcing Solutions Pvt, Ltd, Chennai அவர்களின் 27.05.2019ஆம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஒப்பந்த காலத்திற்கு பின்பு அதே ஒப்பந்த விகிதத்தில் தொடர்ந்து பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார்.

இந்நிலையில், பார்வை 3இல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் DBC பணியாளர்களின் எண்ணிக்கை முழுவதனையும் பற்றாக்குறையின்றி வருடம் முழுவதும் பணி மேற்கொள்ள பயன்படுத்திட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள்.

எனவே, நகரின் பொது சுகாதார நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், மேற்படி ஒப்பந்த காலத்தினை 31.08.2019 ஆம் தேதிவரை நீட்டிப்பு செய்து நோய் தடுப்பு பணிகளை தொடர்ந்து நல்ல முறையில் மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.8.99 இலட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் வழங்கலாம் (ந.க.எண்.217/2019/எச்1)

19.பவானி நகராட்சியின் 2018-19 ஆம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி கணக்குகளுக்கு இயல்பு நிலை கணக்கு மற்றும் UTS மென்பொருள் மூலம் தயார் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட கணக்குகளை தனியரை கொண்டு தயார் செய்யவும் அதற்கு ஆகும் செலவினம் ரூ.50000/- ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவுத் தொகை ரூ.50000/-ஐ வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.482/2016/பி1)

20. மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.4173/2019/உ.தே1 நாள்: 14.05.2019-ல் நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குச்சாவடி பட்டியல்கள் 100 பிரதிகளை அச்சடித்து தயார் நிலையில் வைக்குமாறு தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதன்படி மேற்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் 24.05.2019 -ல் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் வருமாறு.

1. திருவாளர்கள் ராணி கம்யூட்டர்,ஆப்செட் பிரிண்டர்ஸ் - ரூ. 3800/-
2. திருவாளர்கள் அழகிரி ஆப்செட் பிரிண்டர்ஸ் - ரூ. 3750/-
3. திருவாளர்கள் அருள் பவர்பிரஸ் காளிங்கராயன்பாளையம் - ரூ.3400/-

மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ரூ.3400/- கொடுத்துள்ள திருவாளர்கள் அருள் பவர் பிரஸ் நிறுவனத்திற்கு தேர்தல் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி பணிமேற்கொண்டமைக்கும் செலவுத் தொகை ரூ.3400/- திரு.ச.மோகன் உதவியாளர் ரொக்கமாக செலவு மேற்கொண்டுள்ளதால் திரு.ச.மோகன் உதவியாளருக்கு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0141/2019/பி1)

21. பவானி நகராட்சியில் நடைபெற உள்ள சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2019ற்கு தேவையான படிவங்கள், எழுது பொருட்கள் வாங்குதல் வாக்குச்சாவடிபட்டியல் தயாரித்தல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் அனைத்து தேர்தல் செலவினங்களையும் மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.20.00 இலட்சம் ( ரூபாய் இருபது லட்சம் மட்டும் ) ஐ பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. செலவுத் தொகை ரூ.20.00 இலட்சத்தினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0141/2019/பி1)

22. இந்நகராட்சியில் கொசுக்களால் கட்டுப்படுத்தும் பணிக்கு பயன்படுத்தப்படும் கொசுப்புழு லார்வாக்களை அழிக்க கழிவு நீர் தேக்கம், கழிவு நீர் கால்வாய் போன்ற கொசுப்புழு உற்பத்தி இடங்களில் தெளிக்க உபயோகப்படுத்தப்பட்டு வரும், Bacillus Thuriginensis ISRQ elensis ( EC) B.T மருந்து இருப்பு இல்லாததால் அவசர அவசியம் கருதி மேற்படி மருந்தினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கூட்டுறவு நிறுவனமாக Tamilnadu multipurposeIndco Serve , Trichy நிறுவனத்திடமிருந்து 40 லிட்டர் B.T மருந்து ரூ.67968/- தொகையில் கொள்முதல் செய்து செலவினம் மேற்கொள்ளப்பட்டதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் (ந.க.எண்.313/2017/எச்1)

23. பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சி கட்டிடங்கள், ஆழ்துளை கிணறுகள், திறந்த வெளி கிணறுகள், மற்றும் திறந்த வெளி இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தி நிலத்தடி நீர்மட்டம் உயரும் வகையில் ஏற்கனவே நகராட்சி கட்டிடங்களில் உள்ள மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பராமரிப்பு செய்யவும் மற்றும் இல்லாத இடங்களில் புதியதாக அமைக்கவேண்டியுள்ளது. எனவே முதல் கட்டமாக இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 670/2019/இ1)

24.பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவில் துப்புரவுப்பணி மேற்கொள்ளும் துப்புரவு பணியாளர்களுக்கு 2019–2020ம் ஆண்டிற்கு தேவையான தளவாடச்சாமான்களை வாங்கி வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,85,000/–ற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1) ஒப்பந்தப்புள்ளி பெற்று தளவாடச்சாமான்களை வாங்கிக்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.273/2018/எச்1)

25.பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு பணி பாதுகாப்புக்காக வழங்க வேண்டிய பாதுகாப்பு உபரணங்களை (Safety Equipments) 2019–2020–ம் ஆண்டில் தேவைக்கேற்ப வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,70,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. ஒப்பந்தப்புள்ளி பெற்று பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கிக்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.70/2017/எச்1)

26. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தினமும் இந்நகரில் சேகரிக்கப்படும் கழிவுகளில் மக்கும் கழிவுகள் நுண் உரம் கூடத்தில் உரமாக்கப்பட்டு வருகிறது. மக்காத உலர் கழிவுகள் தனியே சேகரித்து திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ல் தெரிவித்துள்ளபடி மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு அனுப்பி இறுதியாக்கம் (Final Disposal) செய்து அப்புறப்படுத்த தினமும் 27 வார்டுகளுக்கு முதன்மை சேகரிப்புக்கு 25 கிலோ கொள்ளளவு

கொண்ட 80 கித்தான் சாக்குப்பைகள் மற்றும் இரண்டாம் நிலை சேகரிப்பிற்கு 40 - 50 கிலோ கொள்ளளவு கொண்ட 25 கித்தான் சாக்குப்பைகளும் தினமும் தேவைப்படுகிறது.

இப்பணியினை 15.07.2019ஆம் தேதி முதல் 30.09.2019ஆம் தேதி வரை மேற்கொள்ளவும், மேற்படி கித்தான் சாக்குப் பைகளை கொள்முதல் செய்து உபயோகப்படுத்தி உலர்கழிவுகளை சேகரித்து அனுப்பி வைக்கவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. இதற்கான செலவினம் ரூ.56,500/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1753/2015/எச்1)

27. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உள்ள 27 வார்டுகளிலும் தினமும் சேரும் கழிவுகளை தரம் பிரித்து மக்கும் கழிவுகள், மக்காத கழிவுகள் என சேகரித்து வரப்படுகிறது. திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016ன் படி தினமும் சேகரிக்கும் அனைத்து கழிவுகளையும் 100% அறிவியல் முறைப்படி செயலாக்கம் (Processing) செய்து சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படா வண்ணம் Final Disposal செய்ய வேண்டும் என விதிகளில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில் தேசிய பசுமை தீர்ப்பாயம் National Green Tribunal வழிகாட்டுதல்படி அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அனைத்து கழிவுகளையும் உரிய முறைப்படி மண், காற்று, நீர் போன்றவைகள் மாசு ஏற்படா வண்ணம் கழிவுகளை மேலாண்மை செய்ய வேண்டும் எனவும், அதற்கு மேதமிகு முன்னால் நீதியரசர் ஜோதிமணி அய்யா அவர்களை தலைவராக கொண்ட கண்காணிப்பு குழு அமைத்து அரசால் கண்காணிப்பு செய்யப்பட்டும் வருகிறது.

இந்நிலையில் இந்நகராட்சியில் தினமும் சுமார் 6.5 MT மக்கும் கழிவுகளும், 3 MT மக்காத கழிவுகளும் சேகரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி மக்கும் கழிவுகளை கையாள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று வார்டு-4 நகராட்சி உரக்கிடங்கில் ஒரு MCC மையமும் (5MT Capacity), வார்டு-11ல் தேவபுரம் மின் மயான வளாகத்தில் 5 MT capacity உடன் கூடிய MCC மையமும், வார்டு 17ல் அம்மன் நகரில் மக்காத உலர்கழிவுகளை தனியே பிரித்து அறிவியல் முறைப்படி Final Disposal செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று 5 MT capacity கொண்ட RRC centre- அமைத்து 3 மையங்களும் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

4வது வார்டு பகுதியில் உள்ள MCC-யில் 13 வார்டுகளில் சேரும் மக்கும் கழிவுகளையும், 11வது வார்டில் உள்ள MCC-யில் 14 வார்டுகளின் மக்கும் கழிவுகளையும் உரமாக்கும் பணிகள் துவக்கப்பட்டு உள்ளது.

மேலும், 27 வார்டு பகுதிகளில் சேரும் மக்காத கழிவுகளை RRC Centre-லும் பிரித்து அனுப்பும் பணிகள் துவக்கப்பட்டு உள்ளது.

இந்த இரண்டு MCC மையங்களிலும் உரமாக்கும் பணிக்கும், RRC பணிக்கும் தனியே துப்புரவு பணியாளர்கள் எவரும் இலலாத காரணத்தால் தற்போதுள்ள துப்புரவு பணியாளர்களையே இப்பணிக்கும் பயன்படுத்தினால் ஏற்கனவே நடைபெறும் அன்றாடப் பணிகள் தேக்கமடைந்து விடுகிறது.

எனவே, நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் வழங்கப்பட்ட பயிற்சி கையேட்டில் தெரிவித்துள்ளவாறு பின்வரும் விபரப்படி துப்புரவுப் பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ள வேண்டி உள்ளது.

| | | |
|---|---|---|
| 1) MCC வார்டு 4 | - | 6 பேர் |
| 2) MCC வார்டு 11 | - | 6 பேர் |
| 3) RRC வார்டு 17 | - | 6 பேர் |

MCC, RRC பணிகளை பார்வையிட 1 மேற்பார்வை பணியாளர் உட்பட 19 துப்புரவு பணியாளர்களை Outsourcing முறையில் ஒப்பந்த முறையில் எடுத்து 01.08.2019 முதல் 31.03.2020 வரை பணி மேற்கொள்வதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. இதற்கான தோராய செலவினம் ரூ.22.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1753/2015/எச்1)

28. இந்நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் சேரும்மக்கும் குப்பைகளை கொண்டு இரண்டு இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள உரம் தயார் செய்யும் மையங்களில் ( micro composting centres) உரம் தயார் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தயார் செய்யப்பட்ட உரம் விற்பனையாகாமல் தற்போது இருப்பில் உள்ளதால் தினமும் சேகரமாகும் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயார் செய்ய தேவையான தொட்டிகளின் எண்ணிக்கை தேவைக்கேற்ப பயன்படுத்தி உரம் தயார் செய்யும் பணிகளில் சிரமம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது.

எனவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(ந.நி4) எண்.219 நாள்: 21.06.2002-ல் தெரிவித்து உத்திரவிடப்பட்டுள்ளபடி விற்பனையாக உரத்தினை நகராட்சிக்குள் மற்றும் சுற்றியுள்ள விவசாய்களுக்கு கம்போஸ்ட் உரத்தினை இலவசமாக வழங்கவும் வழங்கிய கம்போஸ்ட் உரத்தினை அளவினை இருப்பில் இருந்து கழித்து கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1753/2015/எச்1)

29)தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்கராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலை தடுத்தல், திடக்கழிவுகளை குறைத்திடுதல் சம்பந்தமான விழிப்புணர்வு பொதுமக்களிடையே ஏற்படுத்துதல் பணிக்கு பரப்புரையாளர்கள் (Animators & Supervisors) மற்றும் மேற்பார்வையாளர்களை ஈடுபடுத்தியும் Information Education Communication (IEC) தகவல் கல்வி தொடர்பு முறைகள் மூலமாகவும் 2014ஆம் ஆண்டு முதல் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 2016-17 ஆம் ஆண்டிற்கான மானியத்தொகையில் ஏற்கனவே நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்கள் மூலம் இந்நகராட்சிக்கும், பரப்புரையாளர்களை வழங்கும் நிறுவனத்திற்கும் விடுவிக்கப்பட்ட தொகை போக மீதமுள்ள ரூ.1,29,348/-ம், 2016-17-ல் 25% பரப்புரையாளர் மற்றும் மேற்பார்வையாளரின் சம்பளத்திற்கான மானியத்தொகை ரூ. 3,75,825/-ம் 2018-19 ஆண்டிற்கான பரப்புரையாளர் மற்றும் மேற்பார்வையாளரின் சம்பளத்திற்கான மானியத்தொகை ரூ. 9,73,125/-ம் ஆக மொத்தம் ரூ. 14,78,298/- இந்நகராட்சியின் SBM கணக்கிற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் உத்திரவுப்படி தொகை விடுவிக்கப்பட்டு கணக்கில் பெறப்பட்டுள்ளது.

மேற்படி தொகையில் ஏற்கனவே நகராட்சியில் உள்ள பரப்புரையாளர் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு பொது நிதியில் வழங்கப்பட்ட தொகையினை சரிகட்டி கொள்ளவும் மீதமுள்ள தொகையில் உத்திரவில் குறிப்பிட்டுள்ளப்படி IEC பணிகளுக்கும் பரப்புரையாளர்களை வழங்கும் நிறுவனத்திற்கும் பட்டியல் தொகை வழங்கிடவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க. எண் 631/2018/எச்1)**